மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) வழக்கமாக விதிக்கப்படும் மோட்டார் வாகன வரியில் மூன்றில் ஒரு பாகம் வரியாக வசூலிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு வருமானம் ரூ. 1,01,964 ஆகும்.

அரசு ஊழியர்களின் ஒய்வு பெறும் வயது.

வினா எண் 480—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அரசு ஊழியர்கள் வேலைக்கு சேரும் வயது வரம்பு 25 லிருந்து 26 ஆக சர்வீஸ் கமிஷன் உயர்த்தப்பட்டுள்ளதற்கிணங்க ஒய்வு பெறும் வயது வரம்பினையும் 55-லிருந்து 56 ஆக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :— இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, முன்னாலே அரசு பணிகளில் அமர்ந்துள்ள அரசு பணியாளர்களில் பலர் அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிற 55 வயதை தாண்டியும்கூட மேலும் அவர்களின் பணிக்காலம் நீட்டப்பட்டு வருதவாக சில நேரங்களில் அறிவிக்கப்படுகிறது. புதிதாக வேலையற்றிருக்கும் பலருக்கு, இதனால் அவர்களுக்கு வேலை கிடைக்கும் காலமும் நீட்டப்படுகிறது. இந்த முறையை கைவிட்டு, சரியான வயது வரம்பில் அவர்களை பணிக்காலத்திலிருந்து ரிடையர் செய்து நல்ல முறையில் பணியாற்ற அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இதே யோசனையின் அடிப்படையில்தான் எவ்வளவுக்கெவ்வளவு குறைந்த அளவினருக்கு பணிக்காலம் நீடித்து தர முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நீட்டித் தரப்படுகிறது. அதுவும் அவசியமான காலங்களில் மட்டும்தான் நீட்டிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, அரசுப் பணிகளில் உள்ளவர்களில் சிலர் தங்கள் பணிக்காலம் முடியும் முன் வாலன்டரி ரிடையர்மென்டில் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் காந்திமதி அம்மாள் என்கிற ஒரு பணியாளர் அவர் டிபுடி ரைக்டர் கல்வித்துறை அவரைக் கூட

1979 மார்ச் 20]

அனுப்பி இருக்கிறார்கள். அப்படி அனுப்பப்பட்டவர்களில் சிலர் ரிட் மனு போட்டு, ஐகோர்ட் தீர்ப்பில் கவர்மெண்ட் லெயிட்டவுன் பண்ணிய கைட் லைன் புரோசிஜர் சரியாக அமுல் படுத்தப் படவில்லை என்று சொல்லி ரி-இன்ஸ்டேட் செய்யச் சொல்லி தீர்ப்பாகியிருக்கிறதால், அந்த தீர்ப்பின்படி (In the light of Judgment.) அது வரைக்கும் அந்த வரம்புக்கு முன்னாலேயே ரிடையர் செய்யப்பட்டவர்களுக்கும் பரிசீலனை செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அது பற்றி தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, அரசுப்பணிக்கு ஆட்கள் எடுப்பதற்கு வயது வரம்பு வைத்திருக்கிறார்கள். அந்த வயது வரம்பு வேலைக்கு ஆள் கிடைக்காத காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட வரம்பு. ஆனால் இப்பொழுது பலரும் வேலைக்கு வரத்தயாராக இருப்பதுடன், அதற்காக எம்பிளாயின்மெண்ட் எக்சேஞ்சிலும் பதிவு செய்து விடுகிறார்கள். அதனால், இந்த வயது வரம்பையே எடுத்துவிட அரசு முன் வருமா? ஆந்திரா கவர்மென்டிலே எமர்ஜென்சி நேரத்தில் வாலன்டரி ரிடையர்மென்ட் கொடுத்தவர்களுக் கெல்லாம் மறுபடியும் வேலைகொடுத்துவிட்டார்கள். அதுபோல் இந்த அரசும் செய்யமுன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பணிகளில் வேலைக்கு வருகிறவர்கள் குறைந்தது 25 ஆண்டுகள் பணி ஆற்றினால்தான் அரசு பணியாளர்கள் சர்வீஸ் அடிப்படையில் பென்ஷன், மற்ற எல்லா சலுகைகளும் கிடைக்க முடியும். ஏற்கெனவே 25 வயது இருந்ததை 26 என்று அதிக்கபடுத்தியிருக்கிறோம். புதிதாக வேலைக்கு வரவிருக்கும் அத்தனை பேருக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இதை உயர்த்தியிருக்கிறோம். தவிர அப்படி வயது வரம்பையே அடியோடு நீக்கும் உத்ததேசம் அரசுக்கு இல்லை.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பணியாளர் ஒருவர் ஓய்வு பெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னாலேயே வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறார், அது நியாயமா? அந்த 3, 4 மாதங்களுக்கு அவர் அங்கேயே தொடர்ந்து இருக்க அனுமதித்தால் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தொடர்ந்து அங்கேயே இருந்தால் ஏதாவது நிர்வாக சீர்கேடு ஏற்படுமோ என்று அஞ்சப்படுகிற நிலை ஏற்பட்டால்தான் அவர்களை அவ்வாறு மாற்றுகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 மார்ச் 20

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எம்பிளாயின்மென்ட் எக்சேஞ்சில் 9 லட்சம் பேர்களுக்கு மேல் பதிவு செய்திருக்கிறார்கள். 22 வயதில் பதிவு செய்தால் 8 வருடங்கள் காத்திருக்கிறார்கள். 8 ஆண்டுகள் ஆனால், 30 வயது அடைந்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் அரசுப் பணிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படி கட்டுப்பாடு இல்லாமல் வயது வரம்பை மாற்றுவதற்கு அரசு ஏதாவது பரிசீலனை செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்புத் தர வேண்டும் என்பது நல்லதுதான். ஆனால் அரசே அவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்பது நாட்டில், நமது பொருளாதார நடைமுறைக்கு ஒத்து வராத ஒன்று. எல்லோருக்கும் அரசு வேலை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் முயற்சி செய்ய ஆரம்பித்தால் ஐம்பது வயதுக்காரர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும் என்று வயது வரம்பை மாற்றவேண்டி வரும்.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, அரசு பணிகளுக்குகாக எஸ். எஸ். எல். சி. ஸ்டேண்டர்டு, பி.யூ.சி. ஸ்டேண்டர்டு தேர்வில் பி.ஏ., எம்.ஏ. படித்தவர்களும் போட்டியிடுகிறார்கள். அதனால் காம்பெடிஷன் அதிகமாகி எஸ். எஸ். எல். சி. படித்தவர்களுக்கு அந்த வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. இதனால் வயது கூடுகிறது. நானும் 7 ஆண்டுகள் இந்த தேர்வு எழுதி முயற்சி செய்தேன். தேர்வு பெற முடியாமல் போய்விட்டது. இப்படி கஷ்டப்படுகிறவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள். இந்த வயது வரம்பினால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு மிகவும் குறைந்து விடுகிறது. ஆகையால் அரசு வயது வரம்பையாவது குறைக்க வேண்டும் அல்லது எஸ். எஸ். எல். சி. ஸ்டாண்டர்டுக்கு, டி. என். பி. எஸ். ஸி. தேர்வில் எஸ். எஸ். எல். சி. படித்தவர்களுக்கு முதலிடம் தந்து வேலை வாய்ப்பு வழங்க அரசு முடிவு எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வயது வரம்பை தளர்த்தி இருந்தால், நாம் ஒரு எம். எல். ஏ. வை இழந்திருப்போம். இருப்பினும் கல்வித் தரத்தைப்பொறுத்த வரையில், அதிகமாகவோ, குறைவாகவோ இல்லாமல் அவர்களின் கல்வி தரத்திற்கு ஏற்றவாறுதான் கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் 9-10)

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர் வேலைக்கு தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர் வருவதற்கு வாய்ப்பாக கருதி, அவர்களுக்கு வயது

1979 மார்ச் 20]

வரம்பு நிர்ணயம் செய்யப்படாமல் இருந்தது, ஆனால் இடைக்காலத்தில் அவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டதா? எப்போது அது செய்யப்பட்டது? அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மற்றும் வயது வரம்பு தேவை இல்லை என்ற நிலைமை இருந்தது. ஆனால் கடந்த அரசு 30 வயது என்று நிர்ணயம் செய்து கொடுத்தது. அதற்குக் காரணம் குறைந்தது 25 ஆண்டுகளாவது அவர்கள் பணியில் இருக்கவேண்டும் என்பது தான்.

திரு. வீ. கே. கோதண்டராமன்: சார், கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலேயே குறைந்தது 25 ஆண்டுகளாவது அவர்கள் பணியாற்றவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி வருகிறபோது 30 பிளஸ் 25—55 ஆகிறது. ஆகவே 30 வயது வரையில் என்று எல்லோருக்கும் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 30 வயது என்பது தாழ்த்தப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட தனிச்சலுகை. அதை எல்லோருக்கும் அளித்து விட்டால், தாழ்த்தப்பட்டவர்களுக்கு பின் என்ன சலுகை அளிப்பது.

செய்தித் தாட்கள் மீது நடவடிக்கை.

வினா எண் 481—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசியல் தலைவர்களைப்பற்றி தனிப்பட்ட முறையில் அவதூறாக எழுதி வரும் செய்தித் தாட்கள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுவரை எந்தெந்த செய்தித் தாட்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—

(அ) குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 199 (1)-ன் கீழ், தனிப்பட்ட முறையில் ஒருவர் மீது அவதூறு கூறப்பட்டால், அதனால் பாதிக்கப்பட்ட நபர் மனு செய்தாலன்றி அவ்வழக்கினை கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே அரசியல் தலைவர்களைப் பற்றி தனிப்பட்ட முறையில் அவதூறாக எழுதி வரும் செய்தித் தாட்கள் மீது பாதிக்கப்பட்டவர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.